# மாற்குக்கு எத்தனை மார்கு போடலாம்?

யோவான் மாற்குவைக் குறித்து புதிய ஏற்பாட்டில் விவரங்கள் அங்குமிங்குமாகத் தெளிக்கப்பட்டிருக்கின்றன. அவரது வாழ்வை கோர்வையாகக் காணவேண்டுமென்றால் சற்றுக் கற்பனையும் தேவைப்படுகிறது. சிதறிக் கிடக்கும் விபரங்களைச் சேர்த்துக் கோர்த்து, வர்ணந்தீட்டி முழுமையாய் காண முயற்சித்திருக்கிறேன்.

யோவான் என்ற இவனது யூதப் பெயரின் கருத்து, “யேகோவா கிருபையுள்ளவர்.” மாற்கு என்ற ரோமப் பெயரின் கருத்து, “பெரிய சுத்தியல்.” இயேசுவை முதன்முறையாகக் கேட்டபோது இவனுக்குப் பதினாறு வயது இருந்திருக்கலாம். அவரது போதனைகளால் தொடப்பட்ட இவன் கூடுமான இடங்களுக்கெல்லாம் அவரைப் பின்தொடர்ந்திருப்பான். பேதுரு அங்கிளோடு ஒட்டிக்கொண்டதால் அவரிடமிருந்து பலவற்றைக் கற்றுக்கொண்டான். “அங்கிள், இயேசு பிரமாத மான போதகர்,” என்றபோது பேதுரு, “அதுமட்டுமல்ல, அவர் இறைமகன்!” என்பார். இப்படியாக அந்த இளம் உள்ளத்தில் விசுவாசம் விதைக்கப்பட்டது. கெத்செமனேயில் இயேசு பிடிக்கப் பட்டார் என்ற செய்தி எட்டியதும் ஒரு போர்வையைச் சுற்றிக் கொண்டு வெளியே ஓடினான். ஒருவர் அந்தப் போர்வையைப் பிடிக்கவும் அதை விட்டுவிட்டு ஓடிப்போனான் (மாற் 14:51). இரவெல்லாம் அழுகைதான். இயேசு சிலுவையில் அறையப் பட்டார் என்ற செய்தி கேட்டுத் துடித்த அவன் அவரது உயிர்த் தெழுதலின் செய்தி கேட்டு மான் குட்டியாய்த் துள்ளினான். பேதுரு அங்கிளோடு ஒட்டிக் கொண்டான்.

பணக்கார கைம்பெண்ணாகிய அவனது அம்மா மரியாள், எருசலேமில் ஒரு பெரிய வீட்டில் வசித்து வந்ததால் அது வழக்கமாக விசுவாசிகள் கூடுமிடமாயிற்று (அப் 12:12). எல்லோராலும் விரும்பப்பட்ட பர்னபாஸ் என்ற அவனது தாயின்

சகோதரன் சீப்புருதீவில் வசித்துவந்தார். தனது நிலத்தை விற்று சபைக்குக் கொடுத்த லேவியர் இவர் (அப் 4:36,37). எருசலேமிற்கு வரும்போதெல்லாம் தனது சகோதரியின் வீட்டில் தங்கின இவர், இப்போது வாலிபனாயிருந்த மாற்கின் இதயத்தில் குடியேறினார்.

தனது ஆருயிர் பேதுரு அங்கிளை ஏரோது சிறையிலடைத்துவிட்டான் என்றச் செய்தி அதிரடியாய் வந்தது. பேதுரு அங்கிள்தான் அவனை இரட்சிப்புக்குள் நடத்திப் போதித்தது (1 பேதுரு 5:13). இரத்தசாட்சியாய் உயிர்விட்ட யாக்கோபை நினைத்து யாவரும் பேதுருவின் முடிவையும் தீர்மானித்து விட்டனர் (அப் 12:1-3). பெண்கள் கூட்டத்தில் தனித்திருந்த வாலிபன் மாற்கு உள்ளறையில் தனித்து பேதுரு அங்கிளிற்காக ஜெபிக்கலானான். அவரைக் கண்ட மாத்திரத்தில் மாற்குவிற்குத் தலைகால் புரியவில்லை. ஆக மாற்குவிற்குப் பேதுருவின் ஆலோசனைகள் தொடர்ந்தன. நல்ல யூதனாக வளர்க்கப்பட்டு, தாய் மற்றும் பர்னபாஸ் மாமாவின் போதனைகளால் முன்மாதிரி கிறிஸ்தவனாக வளர்ந்தான். அந்தியோகியா ஊழியத்தில் தீவிரமாயிருந்த மாமா, சவுலுடன் கூட அந்தியோகியா விசுவாசிகள் எருசலேமின் ஏழைப் பரிசுத்தவான்களுக்காகச் சேகரித்த தர்மப் பணத்தைக் கொடுக்க வந்திருந்தார். அவர்கள் மரியாளின் வீட்டிற்கு வந்தனர்.

“என்னடா மாற்கி, குண்டுச் சட்டிக்குள்ள குதிர ஓட்டிக் கிட்டிருக்க? எங்ககூட அந்தியோகியா வரலாமுல்ல? எங்களுக்கும் உதவியாய் இருப்பதோடு நெறய கத்துக்குவ, வா,” என்று மாமா ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். “போடா போ, வீட்டுக் குள்ளேயே அடஞ்சு கெடக்காத.” இது அம்மா. புதிய அங்கிள் சவுலைப் பார்த்தாலே மாற்குவுக்குத் தொடை நடுங்கியது. போய்ப் பார்த்தால்தான் என்ன என்று பையைத் தூக்கி முதுகில் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டான். “இது என்னுடைய வாஞ்சை இல்லாவிட்டாலும் இப்போதைக்கு நல்லதொரு



தெரிந்தெடுப்புதான்” என்று யோசித்துதான் முடிவெடுத்தான் (அப் 12:25).

அந்தியோகியா பயணம் துவங்கியது. தசைகள் உருள மாற்கு அவர்கள் பெட்டிப் படுக்கைகளைத் தூக்கிக்கொண்டும் எடுபிடி வேலைகளைச் செய்துகொண்டும் உதவினான். அதிகமான புறவின மக்களைக் கொண்ட அந்தியோகியா சபை மாற்குவுக்குப் புதிதாயிருந்தது. பர்னபாஸ் மாமாவும் சவுல் அங்கிளும் முக்கிய அங்கத்தினர்; புதிதாக மனந்திரும்பினவர்களுக்கு இயேசு கிறிஸ்துவையும் அவர் அருளும் இரட்சிப்பையும் கற்பித்தனர். மேலும் அங்கு நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும் இறைவாக்கினராயும் போதகர்களாயும் இருந்தனர். பலதரப்பட்ட மக்களோடு பழகும் வாய்ப்பு மாற்குவிற்கு. இப்போது அதில் ஒரு இறைவாக்கினர் பர்னபாவையும் சவுலையும் கர்த்தர் அழைத்த ஊழியத்திற்காகப் பிரித்துவிடும்படி இறைவாக்குரைத்தார். அந்தியோகியா சபையில் நற்செய்தியாளர்களுக்கும் மேய்ப்பர்களுக்கும் தட்டுப்பாடு. பர்னபாவும் சவுலும் நற்செய்தியைப் பகிர மக்களைத் தேடிச் செல்வதை சபை மூப்பர்கள் கவனித்திருந்தனர். எனவே இவர்களிருவரையும் நற்செய்தியாளர்களாக அனுப்பி, அவர்கள் பணி வெற்றிகரமாக அமைந்தால் புதிய சபைகளுக்கு மேய்ப்பர்களை நியமிக்கலாமே எனத் தீர்மானித்தனர். அப்பொழுது அந்தியோகியா சபையிலும் சுவிசேஷகர்களும் ஆயர்களும் இருப்பரே. எனவே கைகளை வைத்து ஜெபித்து அவர்களை அனுப்பி வைத்தனர். யோவான் மாற்குவை விட்டுச் செல்ல முடியாது. ஆக அவனும் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு புறப்படவேண்டியதாயிற்று (அப் 13:1-3).

அப்படியே அந்தியோகியாவிலிருந்து கடற்கரை பட்டணமாகிய செலூக்கியாவிற்கு வந்து, கப்பலேறி சீப்புருதீவிலுள்ள சலாமி பட்டணத்திற்கு வந்தார்கள். ஒருவேளை இது பர்னபாவின் இடமாதலால் ஊழியம் துவங்க சாதகமான இடமாயிருக்கும்

என்று நினைத்திருக்கலாம். எல்லாமே மாற்குவிற்கு புதிய அனுபவமாக இருந்தது. சலாமியில் ஒவ்வொரு ஜெபாலயமாகச் சென்று நற்செய்தியை அறிவித்தனர். யோவான் மாற்கு உதவி யாளனாக அவர்கள் பயண காரியங்களைப் பார்ப்பதும், கடைக்கு ஓடுவதும், டிக்கெட் புக் செய்வதும், பெட்டி, படுக்கைகளைத் தூக்கிச் செல்வதுமான எடுபிடி வேலைகளைச் செய்தான் (அப் 13:5).

சவுல் மற்றும் பர்னபாவின் பிரசங்கங்களை கவனமாகக் கேட்டான். "இயேசுவைப் பற்றி இவ்வளவு இருக்கிறதா? நான் அறிந்தது கொஞ்சம்தானே. இந்தச் சரித்திர உண்மைகளை எழுதாவிட்டால் காற்றோடு போய்விடுமே" என்றுக் கவலைப் பட்டான் மாற்கு. தொலைதூரக் கனவு ஒன்று அவனுக்குள் உதயமானது. அது பயித்தியக்காரத்தனமாகத் தெரிந்ததால் தனக்குள் வைத்துக் கொண்டான். பர்னபாவும் சவுலும் இரவு தூங்கும்போது மெழுகுவர்த்தி விளக்கொளியில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் குறித்து தனக்குத் தெரிந்ததெல்லாம் எழுதத் துவங்கினான். பர்னபா விழிக்கும்பொழுது, "என்னப்பா செய்துகொண்டிருக்கிறாய்? விளக்கை அணைத்து விட்டுப் படு, போ. நாளை அதிக வேலை இருக்கிறது" என்பார். அரைமனதாய் மாற்கு படுத்துக் கொள்வான். நெஞ்சிலோ இயேசுகிறிஸ்துவைப் பற்றி ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்ற கனா அழுத்தியது. மாற்கின் இதயத்தில் முளைவிட்டுக் கொண்டிருந்த விதையைக் குறித்து பர்னபாவோ சவுலோ அறியவில்லை.

பாப்போ பட்டணத்தை வந்தடைந்தது குழு. அங்கே பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டார்கள். அவன் புத்திசாலியான செர்கியுபவுல் என்னும் ரோம அதிபதியோடே இருந்தான். தேவவசனத்தைக் கேட்க ஆசைப்பட்டு பர்னபா வையும் பவுலையும் அதிபதி அழைத்தனுப்பினார். அழையாத



விருந்தாளியாக மாற்குவும் அவர்களோடே செல்லவேண்டிய தாயிற்று. "இதற்காகத்தான் நான் இங்கிருக்கிறேனா?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். மறுபடியும் மறுபடியும் வந்த பதில், 'இல்லை' என்பதே. மாயவித்தைக்காரன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி அவர்களோடு எதிர்த்துநின்றான். இப்பொழுது பவுலாகிய சவுல் அவன் குருடாகும்படிச் செய்தார். அதிபதி ஆச்சரியப்பட்டு விசுவாசிக்க லானார் (அப் 13:6-12).

பவுலும் குழுவினரும் பாப்போ பட்டணத்தைவிட்டு கப்பலேறி பம்பிலியாவிலிருந்த பெர்கே பட்டணத்தை அடைந்தனர். வீட்டையும் அம்மாவையும் நினைக்கத் துவங்கி விட்ட மாற்குவுக்குப் போதும்போதுமென்றாகிவிட்டது. அந்தியோகியா போய் திரும்பிவிடலாம் என்று நினைத்திருந் தான். மாமாவோ கால்களில் சக்கரம் கட்டியதுபோல் சுற்றுகிறார். மட்டுமல்ல, அவனது அழைப்பு இதுவாக மாற்குவுக்குத் தோன்ற வில்லை. அவனது மூளையை வேறு ஏதோ குடைந்து கொண் டிருந்தது. "பிரசங்கிப்பது நல்லதுதான். ஆனால் இதையெல்லாம் எழுதி மக்கள் கரங்களில் கொடுத்துவிடுவது சாலச் சிறந்த தன்றோ? மறந்துபோகும் கவலையில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம். என்னுடைய தரிசனத்தைச் செயல்படுத்த நேரமேயில்லையே," என்று உடுக்கை இழந்தவன் கைபோல மாற்கு உணர்ந்தான். வாழ்க்கை அவனுக்கு சுவாரஸ்யமாயில்லை. எருசலேம் போய் விடத் தீர்மானித்துவிட்டான். மாமாவிடம் மெதுவாகப் பேச்சை எடுத்தான். "டேய் மாற்கு, உன்னை நம்பிதாண்டா வந்திருக் கிறோம். அம்போ என்று விட்டுச்சென்றுவிடாதே," என்று மட்டும் சொன்னார். பவுலின் முகம் சுண்டியிருந்தது. "இந்த வாலிபரை நம்பி எதையும் செய்யமுடியாது," என முணுமுணுத் தார். மாற்குவோ தீர்மானமாய் எருசலேமிற்கு டிக்கட்டை பதிவு செய்தான்.

பையும் கையுமாக வாசலில் நின்ற அருமை மகனைக் கண்ட அம்மாவிற்கு அதிர்ச்சி. “என்னடா மாற்கி, என்னாச்சு? போன மச்சான் திரும்பிவந்தான் போல வந்துட்ட?” புருவங்கள் மேலெழ அம்மா கேட்டாள். “விடுங்கம்மா, எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது,” என்று மட்டும் சொல்லிவிட்டு குளிக்கச் சென்றான் மாற்கு. மறுநாள் சூரியகாந்தி போல பிரகாசமாய் எழுந்த மாற்கு, இயேசுவோடும் யோவான் திருமுழுக்கினனோடும் இருந்தவர்களைச் சந்தித்து விவரங்கள் சேகரிக்கப் புறப்பட்டுவிட்டான். சோம்பிக்கிடந்த அவனது புத்தி இப்போ சுறுசுறுப்பாய் வேலைசெய்தது. வீட்டுக்குத் திரும்பியவன் எழுதினான், அடித்து எழுதினான், திருத்தி எழுதினான். இரவில் கண்விழித்து எழுதினான். வாய்மொழியாய் செய்தியைக் கடத்துவதில் அர்த்தமில்லை. மக்கள் கைகளில் சத்தியம் இருக்கவேண்டும். ஜெபித்தான். அவனுக்குள் ஏதோ ஒன்று துடித்தது. பரிசுத்த ஆவியானவர் தன்னை எழுதும்படி ஏவுவதை உணர்ந்தான் (அப் 13:13; 2 பேது 1:20,21).

மாற்குவின் எண்ணங்கள் சுழன்றன. “மாமாவும் பவுல் அங்கிளும் பிரசங்கம் பண்ணட்டும். ஆனால் இப்போது அது என் அழைப்பல்ல. கிறிஸ்துவின் வாழ்க்கை சரிதையை எழுதும் எண்ணம் என்னுள் பற்றி எரிவதை நான் அசட்டை செய்ய முடியாது. இந்தப் படித்த புறவினத்தவரைச் சந்திக்க வேறொரு வழி இருக்கவேண்டும்! மத்தேயு அங்கிள் எழுதியதை நான் வாசிக்க அனுமதித்தார். ‘நல்லா இருக்கு அங்கிள்,’ என்று சொல்லி வீடுவந்தேன். ஆனால் அப்பாடா, பழைய ஏற்பாட்டில் வாக்குப்பண்ணப்பட்ட மேசியாதான் இயேசு என்று யூதர் களுக்கு நிரூபிப்பதிலேயே கவனம் செலுத்தியுள்ளார். இந்த ரோமர்களுக்கு பழைய ஏற்பாடே தெரியாதே. அவர்களுக்கு என்ன புரியும்? லூக் அங்கிளது வாசிப்பதற்குள் விடிந்துவிடும். யோவான் அண்ணனது, இறையியல் நிறைந்தது. புறவினத்தவர் கையில் எடுத்தால் படித்து முடித்துவிடக்கூடிய சுருக்கமான



சுலபமான சிறிய புத்தகம் வேண்டும்.” மாற்குவிற்கும் ஊழியம் விருப்பம்தான்; ஆனால் முழு புறவின உலகிற்கும் செய்தியைக் கொடுப்பதே அவனது தீரா வாஞ்சை. வேறொரு பரிமாணத்தில் அவனது மூளை வேலை செய்துகொண்டிருந்தது.

பவுலும் பர்னபாவும் ஊழியத்தை நிறைவேற்றி அந்தி யோகியா திரும்பினர். நிறுவின சபைகளைப் பார்த்து வரலாமே என்றார் பவுல். “நல்ல ஐடியா, போவோம்; மாற்குவையும் கூட்டிச் செல்வோம்,” என்றார் பர்னபா உற்சாகமாக. சகோதரி மகனை மிஷனரி ஆக்கிவிடத் தீவிரமாயிருந்தார். பவுலின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன: “மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கமுடியாது. யூஸ்லெஸ் ஃபெல்லோ! தேவையான நேரத்தில் கைவிட்டு ஓடிவிடுவான். அம்மா பிள்ளை, சொப்பனக் காரன்,” அடுக்கிக்கொண்டே போனார். “வாலிபருக்கு சட்டென்று சீட்டு கிழித்துவிடக்கூடாது. எல்லாரையும் ஒரே அளவுகோலால் அளக்கமுடியாது.” இது பர்னபா. “நான் அவனைக் குற்றஞ்சாட்டவில்லை, நடைமுறையில் சிந்திக்கிறேன். எவ்வளவோ முக்கியமான வேலைகள் இருக்கும்போது புரொபசர் போல எழுதிக்கொண்டே இருக்கிறான்.” வீரிட்டு எழுந்த உணர்வுகளை அடக்கிக்கொண்டு பவுல் வார்த்தைகளைக் கக்கினார். பர்னபாவின் உதடுகள் துடித்தன. “ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். யாருக்குத் தெரியும்? கடவுள் ஒருநாள் அவனது எழுத்துக்களைப் பயன்படுத்தலாமே.” “ஓகே பர்னா, நீ உன் புரொபசரோடு போ. உனக்கு உன் சொந்தக்காரன் வேணும், அதானே? நான் சீலாவைக் கூட்டிக்கொண்டு போகிறேன்.” சத்தங்கள் உயர்ந்தன. முகங்கள் சிவந்தன. யாரும் விட்டுக் கொடுப்பதாயில்லை. கைகலப்பின்றி யுத்தம் ஓய்ந்தது. சீலாவைக் கூட்டிக்கொண்டு பவுல் சிரியா சென்றார்; மாற்கோடு கூட பர்னபா சீப்புருதீவிற்குக் கப்பலேறினார் (அப் 15:36-41). புரிதல் மட்டும் இருந்தால் பிரிதல் இல்லையே என மாற்கு ஏங்கினான்.

“என்னால்தானே எல்லாம்,” என்று மாற்குவிற்குக் குற்ற வுணர்வு. இளையவனாதலால் பேசமுடியவில்லை. “நான் இருக்கும்விதம் ஓகே. மற்றவர்களைவிட நான் வித்தியாசமா யிருக்கலாம், ஆனால் நான் ஓகே,” எனத் தன்னைத் தேற்றிக் கொண்டான். தன்னைக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிடாமல் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு மாமா இருக்கிறாரே, அது போதும் என்றெண்ணினான். கடுமையான பால் அங்கிளைப் பார்க்கவே பயந்தான். அவரை விட்டு ஓடிவிடலாமா என்ற ஒரு எண்ணம். ஆனால் நாளடைவில் பயம் தெளிந்து அவரைச் சந்தித்தான். கைகுலுக்கினர். மறுபடி பவுலுக்கு உடன்ஊழியனானான் (பில 24; கொலோ 4:10,11). கடுமையான வெளித்தோற்றத்திற்கு உள்ளே மென்மையான ஒரு சிநேகிதனைக் கண்டான். தனக்கு உபயோகமுள்ளவனாய் இருந்ததினால் மாற்குவைக் கூட்டிவா என்று பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதினது, மாற்குவை அவர் ஏற்றுக்கொண்டதற்கு அருமையான சாட்சி (2 தீமோ 4:11). காயம் முற்றிலும் ஆறினது.

இப்போது மாற்கு தேறின மனிதன்; அவனது புத்தகமும் பல திருத்தங்களுக்குப் பிறகு முற்றுப்பெற்றது. “மம்மி, வாசித்துச் சொல்லுங்கள்,” என்று மாற்கு புத்தகத்தை தொப்பென்று அம்மா மடியில் போட்டான். அன்னை வாசித்தாள், அகமகிழ்ந்தாள். “மாமாவிடம் கொடு,” என்றாள். பர்னபாவின் முகம் மலர்ந்தது. “சூப்பர் டா,” என்று முதுகில் தட்டினார். “பத்திரமாய் வைத்து பவுல் அங்கிளிடம் கொண்டுபோ. அவரது கருத்து சரியாக இருக்கும்.” மாற்குவின் பிடிவாத முயற்சி இறுதியில் கனிந்து பழமாயிற்று. திடீரென்று ஒருநாள் தீமோத்தேயு வீட்டைத்தேடி வந்து மாற்குவை சந்தித்தான். “அண்ணே, பால் அங்கிள் ரோமாபுரியில் இருக்கிறார், தெரியுமில்ல. நான் பாக்கப் போகிறேன். உங்களையும் கூட்டி வரச்சொன்னார். நீங்கள் அவருக்கு ஊழியத்தில் உறுதுணையாய் இருந்ததால் உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறார்,” என்றான் (2 தீமோ 4:11). மாற்கு தன் கையெழுத்துப் பிரதியை பத்திரமாக எடுத்து



வைத்துக்கொண்டு சீக்கிரமாய்ப் புறப்பட்டான். “பால் அங்கிள் இதைக் குப்பையில் போட்டுவிடுவாரா? அவரது எழுத்துக் களோடு ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லையே,” என்று மாற்கு நினைத்தான். குசலம் விசாரித்துப் பரிசுத்த முத்தங்கள் முடிந்ததும் மாற்கு கவனமாகப் பிரதியை எடுத்து பவுலின் கையில் வைத்தான். வாலிபனாய் கிறுக்கத் துவங்கியது இப்போது மேம்படுத்தப்பட்டு தயாராயிருந்தது. “அங்கிள், நேரமிருக்கும்போது நான் எழுதியிருப்பதை வாசித்துப் பாருங்கள்.” “கொடு, கொடு, இங்கு எனக்கு தேவைக்கு மிஞ்சிய நேரமே இருக்கிறது,” என்றார் பவுல். “என்னால் முடிந்ததை செய்துவிட்டேன். இனி கடவுள் கையில்,” என்று நினைத்த மாற்கு அமைதி ஜெபமொன்றை ஏறெடுத்தான்.

யோவான் மாற்கின் புத்தகம் பவுலை வியப்பிலாழ்த்தியது. “நான் அவனைக் குறைவாக மதிப்பிட்டுவிட்டேன். பாவம் பையன், என்னிடம் கஷ்டப்பட்டுவிட்டான்,” பவுல் சிந்தித்தார். “மாற்கு, இங்கே வா. உன்னை நான் ஆரம் கட்டித் தழுவ வேண்டும். சாரி டா, உன்னை நான் நடத்தின விதத்திற்காய் வருந்து கிறேன். சூப்பர் பையா, இது எல்லாருக்கும் பயனுள்ளதா யிருக்கும், முக்கியமாகப் புறவினத்தவர்க்கு. எளிமையான நடையில் புரியும்படி எழுதியிருக்கிறாய். பத்திரமாக வை. ஒருநாள் இது உலகையே ஆசீர்வதிக்கும்.” வெட்கத்தோடும் மகிழ்ச்சியோடும் அப்பாடா என்று பவுலின் கரடிப் பிடியிலிருந்து நழுவி வெளிவந்தான். தன் தரிசனம் நிறைவேறின மகிழ்ச்சியில் மாற்குவின் முகம் ஒளிர்ந்தது. மற்றவை சரித்திரம்!

மாற்குவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன?

1) வாழ்க்கைப் புயல்களை மேற்கொள்ளக் கற்றுக்கொள்ளுங் கள். தகப்பனை சீக்கிரமே இழந்தாலும், துக்கத்தை மேற் கொண்டு வாழ்வை முழுமையாய் வாழ்ந்து திருத்தூதுவனும் பெரும் வரலாற்றாசிரியனுமானான். தடைகளைத் தாண்டிச் செல்லுங்கள்.

2) வாழ்க்கையில் தரிசனமும் நோக்கமும் அவசியம். தரிசன மற்றோர் ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களாக வாழ்வை வீணடிப்பர். மாற்கு தரிசனமுடையவனாய் சோர்பு களை மேற்கொண்டு தரிசனத்தை நிறைவேற்றி உலகை ஆசீர்வதித்தான். உங்கள் உள்ளத்திலிருக்கும் தீப்பொறியை அசட்டை செய்யாதீர். கண்ணும் கருத்துமாயிருங்கள். பிறர் சொல்வதைவிட ஆண்டவர் நீங்கள் என்ன செய்யவேண்டு மென்றிருக்கிறார் என்பதைப் பகுத்தறிவது முக்கியம். "ஒவ்வொருவரும் செய்யக்கூடிய ஒன்று இவ்வுலகில் உள்ளது. இந்த உலகிற்குப் பரிசளிக்கக்கூடிய தனித்துவ மான ஒன்றுடன் இறைவன் நம் அனைவரையும் படைத் துள்ளார்," என்கிறார் நோபல் பரிசு பெற்ற லேமா கோவி.

3. நல்லவர் சகவாசத்தில் இருங்கள். பேதுரு, பர்னபா மற்றும் பவுலுடைய உறவே மாற்குவின் குணநலன்களை உருவாக்கியது.

4. லேசர் ஸ்டிக்கர் போன்றவர்கள் மக்கள். அவர்களது நிறங் களையும் மினுமினுப்புகளையும் காண அவர்களை வெவ்வேறு கோணங்களில் நோக்கவேண்டும். மாற்கு ஒரு பிரசங்கமும் செய்யவில்லை, ஒரு அற்புதமும் நிகழ்ப்பிக்க வில்லை. அவர் எடுபிடி ஆள்தான். உதவியாள் என்ற தனது ஒரு தாலந்தைப் பயன்படுத்தி எழுத்தாளன் என்ற இன்னொரு தாலந்தை சம்பாதித்தார். மனமகிழ்ந்த தலைவர்: "நன்றாய்ச் செய்தாய் உத்தம ஊழியனே, கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய். என்னுடைய மகிழ்ச்சியில் நீயும் பங்கு கொள்," என்றார்.

ஆக, மாற்குக்கு எத்தனை மார்கு போடலாம்?

நான் 110% போடுவேன்!